கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்) தென்காசி

முன்னிலை:- திருமதி.கோ. அனுராதா, L.L.M., M.L.S.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைநிலை மனு எண்.2/2020**

அதன்

**அசல் வழக்கு எண்.111/2020**

மா. ராஜேந்திரன் … மனுதாரர்/வாதி

..எதிர்..

1. அ.சத்தியமூர்த்தி (இறப்பு)
2. ஜெயந்தி
3. எஸ்.வி.எல். நிமேஷிகா தேவி
4. எஸ்.எஸ்.எல். ஹரிகாமினி தேவி … எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

(இடைநிலை மனு எண்.6/2022-ல் 10.11.2022 ஆம் தேதியன்று பிறந்த உத்தரவின் படி இறந்துபோன 1 வது எதிர்மனுதாரரின் வாரிசுகளாக 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் கட்சி சேர்க்கப்பட்டு, இடைநிலை மனு எண்.10/2023-ல் 11.04.2023-ல் பிறந்த உத்தரவின்படி மனு சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இந்த இடைநிலை மனுவானது கடந்த 12.09.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.ஆர்.கே. பாண்டியராஜ் அவர்களும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னதாக வழக்கறிஞர் திரு.சி. அருணாச்சலம் அவர்களும் முன்னிலையாகியுள்ள நிலையிலும், 1 வது எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டிருந்த தருணத்தில் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பார்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், மனுதாரர் தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>உத்தரவு</u>

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 38 விதி 5 மற்றும் பிரிவு 151-ன் கீழ், பிராது தொகையான ரூ.70,00,000/-ற்கு எதிர்மனுதாரர்கள் தக்க ஜாமீன் கொடுக்கும்படியும், தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்குப் பாத்தியப்பட்ட தபசில் சொத்தை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:-

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். 1வது எதிர்மனுதாரர், மனுதாரரிடம் பெற்ற கடன் தொகை ரூ.70,00,000/-ஐ பிராது தேதி முதல் வட்டியுடன் செலுத்தக்கோரி அசல் வழக்கானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தபசில் சொத்தானது 1வது எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்டது. இந்நிலையில் 1வது எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை ஏமாற்றும் நோக்கத்தில் தபசில் சொத்தை வேற மூன்றாம் நபர்களுக்கு வில்லங்கப் பாராதீனம் செய்ய முயற்சித்து வருகிறார். 1வது எதிர்மனுதாரர் அவ்வாறு செய்துவிட்டால் மனுதாரர் அவரது தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடும். இந்நிலையில் வழக்கானது நிலுவையில் உள்ள சமயத்தில் 1வது எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியால் அவரது வாரீசுகளான 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் ரூ.7,00,000/-ற்கு தகுந்தாற்போல் தக்க ஜாமீன் பிறப்பித்துக் கொடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது. தவறும்பட்சத்தில் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்குப் பாத்தியப்பட்ட மனுத் தபசில் சொத்தினை தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்ய வேண்டியது அவசியமாகும். எனவே இந்த மனு தாக்கல்.

3. 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பாராகியுள்ளனர்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

"மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

5. இம்மனுவில் மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **பிரச்சனைக்கான தீர்வு**:-

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். 1வது எதிர்மனுதாரர், மனுதாரரிடம் பெற்ற கடன் தொகை ரூ.70,00,000/-ஐ பிராது தேதி முதல் வட்டியுடன் செலுத்தக்கோரி அசல் வழக்கானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தபசில் சொத்தானது 1வது எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்டது. இந்நிலையில் 1வது எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை ஏமாற்றும் நோக்கத்தில் தபசில் சொத்தை வேற மூன்றாம் நபர்களுக்கு வில்லங்கப் பாராதீனம் செய்ய முயற்சித்து வருகிறார். 1வது எதிர்மனுதாரர் அவ்வாறு செய்துவிட்டால் மனுதாரர் அவரது தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடும். இந்நிலையில் வழக்கானது நிலுவையில் உள்ள சமயத்தில் 1வது எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியால் அவரது வாரீசுகளான 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் ரூ.7,00,000/-ற்கு தகுந்தாற்போல் தக்க ஜாமீன் பிறப்பித்துக் கொடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது. தவறும்பட்சத்தில் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்குப் பாத்தியப்பட்ட மனுத் தபசில் சொத்தினை தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்ய வேண்டியது அவசியம் என்று வாதிட்டிருக்கிறார்.

7. மனுதாரர் தரப்பு மேற்படி கூற்றினை ஆட்சேபித்து, எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியிருந்தாலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டிருந்த தருணத்தில், எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாதரப்பாராக தீர்மானிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், ஏற்கனவே 1வது எதிர்மனுதாரரை தக்க ஜாமீன்தொகையை செலுத்த உத்தரவிட்ட அறிவிப்பானது 1வது எதிர்மனுதாரருக்கு சார்பு செய்யப்பட்டு ஜாமீன் தொகை செலுத்த 22.07.2020 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. அதன்பின்னிட்டும் 1வது எதிர்மனுதாரர் ஜாமீன் தொகை செலுத்தத் தவறியுள்ளார். 19.10.2021 அன்றே 1வது எதிர்மனுதாரர் இறந்துள்ளார். எனவே 1வது எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு குறித்து தெரிந்த பின்னரும் செக்யூரிட்டி கட்டளையை நிறைவேற்ற முன்வராமல் இருந்துள்ளதாலும், 1வது எதிர்மனுதாரர் இறந்த பின்னர் அவரது வாரீசுகளான 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் கட்சி சேர்க்கப்பட்டு, 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய போதிய வாய்ப்பு வழங்கிய பின்னிட்டும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தாலும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்களும் மனுதாரருக்கு செலுத்த வேண்டிய கடன் தொகைக்காக தக்க தவறிய காரணத்தாலும் மனுதாரர் கோரும், தபசில் சொத்தைப் பொறுத்த தீர்ப்பிற்கு முன் ஜப்தி உத்தரவானது மனுதாரருக்கு கிடைக்கக் கூடியது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. பற்றுகை செய்ய வாய்தா 30.10.2023 படி செலுத்த 3 நாட்கள் கால அவகாசம்.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சில் விரிவாக்கம் செய்யப்பட்டு பிழைதிருத்தப்பட்டு, 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

(sd) G. Anuradha
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்**

இல்லை

(sd) G. Anuradha
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

-------------------------------------------------------------------------------

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

இடைநிலை மனு எண்.2/2020

அதன்

அசல் வழக்கு எண்.111/2020

உத்தரவு (நேரிய)

நாள்: 26.09.2023

-------------------------------------------------------------------------------